**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**C.C.564/2025 –** P.W.3

Deposition of witness for Prosecution:

| | |
|---|---|
| Name : திரு. அஜித்குமார் | Father's Name. நடேசன் |
| Village : கீழ்வேளூர் | Age: 29 |
| Date :04.03.2026 | தொழில் : JCB ஆப்ரேட்டர் |

நம்பர்: 9787684496

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **04th day of March 2026.**

Signature of Witness

**Tmt. S. Umamaheswari (Name of the Interpreter)**
Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **04th day of March 2026.**

Signature of Interpreter

**(எதிரி ஆஜர் )**

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் தற்போது கீழ்வேளூர், நேரு நகர், தெற்கு தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் JCB ஆப்ரேட்டராக வேலை செய்து வருகிறேன். கடந்த 26.10.2020ஆம் தேதி நான் EGS பிள்ளை கல்லூரி டோசர் ஓட்டிவிட்டு, மாலை 06.00 மணிக்கு வேலை முடித்துவிட்டு, மாலை சுமார் 06.30 மணியளவில் புத்தூர் நோக்கி, டோசர் வண்டியில் வந்து கொண்டிருந்தேன். எனக்கு முன்பாக பஜாஜ் டிஸ்கவரி வாகனத்தில் நான்கு பேர் குடும்பமாக சென்று கொண்டிருந்தார்கள்.

அவர்கள் இடதுபுற ஓரமாக சென்று கொண்டிருந்தார்கள். அவர்கள் மீது எதிரே வந்த கார் மோதிவிட்டது. அந்த கார் சுமோ ஆகும். அதன் பதிவெண் ஞாபகம் இல்லை.

அந்த வண்டியை ஓட்டி வந்தவர் இறங்கி ஓடிவிட்டதால், அவர் யார் என்று எனக்கு தெரியாது. விபத்தானது செல்லூர் வேகத்தடையிடம் நடந்தது. கார்காரர்தான் வேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ராங் ரூட்டில் வந்து மோதினார். அவ்வாறு மோதியதில் அப்பாவுக்கும், அவரது சிறிய மகனுக்கும் தலையில் பலத்த அடிப்பட்டு இருந்தது. பின்னாடி அமர்ந்திருந்த பையனுக்கு காலிலும், அம்மாவிற்கு தலையிலும் அடிப்பட்டிருந்தது. அதை பார்த்த பதட்டத்தில் இருந்தேன். அருகில் இருந்தவர்கள் 108 ஆம்புலன்ஸிற்கு போன் செய்து வரவழைத்தார்கள். கூட்டத்தில் ஆம்புலன்ஸிற்கு யார் போன் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. அதன் பின்னர் நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். விபத்து நடந்த உடனேயே அங்கு வந்திருந்த போலீசார் அப்போதே அங்கிருந்த என்னை விசாரணை செய்தார்கள். எனது பெயரையும், போன் நம்பரையும் வாங்கி சென்றார்கள்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**.

போலீசார் என்னை விசாரணை செய்து, பதிவு செய்த வாக்குமூலத்தில் விபத்து சமயத்தில் நான் டோசர் வண்டியை ஓட்டிக்கொண்டு வந்ததாகவும், எனக்கு முன்பாகத்தான் நான்கு நபர்கள் குடும்பமாக பஜாஜ் டிஸ்கவரி வாகனத்தில் சென்றபோது விபத்து ஏற்பட்டு, அதை கண்ணுற்றதாகவும் சொல்லியுள்ளேனா என்றால் ? சொல்லியுள்ளேன். நான் அதுபோல வாக்குமூலம் அளிக்கவில்லை என்றும், தற்போது மேற்கண்டவாறு வாக்குமூலம் அளித்ததாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

தற்போது நான் முதல் விசாரணையில் சொன்ன விவரத்தைதான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ? ஆமாம். போலீசார் விசாரணையில் காரை ஓட்டிய நபர் இறங்கி ஓடிவிட்டதால் அவரை எனக்கு யார் என்று தெரியாது என்ற விவரத்தை சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சம்பவத்தை கண்ணுறவில்லை என்றும், போலீசார் சொல்லிக் கொடுத்ததற்கிணங்க சம்பவத்தை கண்ணுற்றதுபோலவும், கார்காரர்தான் வேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ராங் சைட்டில் வாகனத்தை ஓட்டிவந்து, விபத்தினை ஏற்படுத்தினார் என்றும், போலீசார் விசாரணையில் சொல்லாத விவரத்தை நீதிமன்றத்தில் புதிதாக சொல்லி, தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்து நடந்த இடத்திற்கு, விபத்து நடந்த உடன் 10 நிமிடத்தில் போலீசார் வந்து பார்த்து, விசாரணை செய்தார்கள். அவர்கள்தான் சம்பவ இடத்தில் இருந்து காயம்பட்ட நபர்களை எல்லாம் அங்கு வந்திருந்த 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். வழக்கு விவரங்கள் தெரியாமல் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

இருசக்கர வாகனத்தில் நான்கு நபர்கள் வந்ததால், வேகத்தடையில் ஏறும்போது, அதை கட்டுப்படுத்த முடியாமல், எதிரே வந்த கார்மீது மோதி விபத்தினை ஏற்படுத்திக் கொண்டார்கள் என்று சொன்னால் சரியல்ல, பைக்கானது ஸ்பீட் பிரேக்கை ஏறி சென்றுவிட்டது. விபத்து சமயத்தில் நான்தான் ஸ்பீட் பிரேக் மீது ஏறி இறக்கினேன், அப்போதுதான் விபத்து நடந்தது. இந்த விவரங்களை போலீசார் விசாரணையில் சொல்லாமல் வழக்கிற்காக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல, என் வண்டிக்கு முன்பாக 50 மீட்டர் தூரத்தில்தான் இருசக்கர வாகனத்தில் சென்றவர்களுக்கு விபத்து ஏற்பட்டு, விழுந்து கிடந்தார்கள். நான் சம்பவ

இடத்திலேயே இல்லை என்பதால்தான் எனது சாட்சிய வாக்குமூலமானது, போலீசார் விசாரணைக்கும், நீதிமன்றத்தில் நான் அளித்த சாட்சியத்திற்கும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.03.04 16:22:53
+0530